

சென்னை வடக்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட புக்கத்துறை ஊராட்சி பாகம் 14 இல் த.வெ.க மற்றும் பா.ம.க வில் இருந்து இளைஞர்கள் 30 பேர் மாவட்ட பொறுப்பாளர் ஆர் .டி. சேகர் முன்னிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தனர். உடன் பகுதி செயலாளர்கள் வ.பெ.சுரேஷ் இரா.செந்தில்குமார் கிளைச் செயலாளர் கணேசன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தலைமைச் செயலகம் அமைக்க எதிர்ப்பு!

மீனவர்கள் கருப்புக்கொடி பேரணி!

சென்னை, அக். 5 - சென்னை, பட்டினப் பாக்கத்தில் புதிய தலை மைச் செயலகம் அமைப் பதற்கு எதிர்ப்புத் தெரி வித்து, மீனவ கிராமங் களைச் சேர்ந்த மக்கள் கருப்புக் கொடிகளுடன் போராட்டத்தில் ஈடுபட் டனர்.

பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயல கம் கட்ட த.வெ.க. அரசு அரசாணை வெளியிட் டுள்ளது. தங்களின் பூர் வீக நிலத்தைப் பாதுகாக் கவும், இந்த அரசாணை யைத் திரும்பப் பெற வலியுறுத்தியும் மீனவர் கள் தொடர் போராட் டங்களை நடத்தி வரு கின்றனர். இதன் தொடர்ச்சியாக நொச் சிக்குப்பம், முள்ளிக்குப் பம், சீனிவாசபுரம், முள்ளிமாநகர் உள் ளிட்ட பல்வேறு மீனவ கிராமங் களைச் சேர்ந்த மீனவ மக்கள் தங்களின் குடும்பத்தினரும் கருப் புக் கொடிகளை ஏந்தி பட்டினப்பாக்கத்தில் போராட்டத்தில் ஈடுபட் டனர். சென்னை கடற் கரை பகுதிகளில் உள்ள மீனவ கிராம மக்கள் தங் களின் வீடுகளிலும், மீன் பிடிப் படகுகளிலும் கருப்புக் கொடிகளை ஏற்றி தங்களது பலத்த எதிர்ப்பைப் பதிவு செய் துள்ளனர்.

தமிழ்நாடு முழுவதும் த.வெ.க. அரசுக்கு எதிராக போராட்டம் - மீனவ அமைப்பு கள் திட்டம்

புதிய தலைமைச் செய லகம் கட்டும் அரசா ணையை த.வெ.க. அரசு ரத்து செய்யாவிட்டால், அடுத்தகட்டமாக ஒட்டு மொத்த தமிழ்நாடு முழு வதும் உள்ள அனைத்து மீனவ கிராமங்களையும் ஒருங்கிணைத்து கூட்டுப் போராட்டங்களை நடத் தவும் மீனவ அமைப்பு கள் திட்டமிட்டுள்ளனர்.

கழுதி அருகே

மின்கசிவில் சிக்கி இரண்டு குழந்தைகள் உயிரிழப்பு!

கனிமொழி இராஜாத்தி கருணாநிதி எம்.பி. இரங்கல்!

சென்னை, அக். 5 - கழுதி அருகே அரசு குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் ஏற் பட்ட மின்கசிவில் சிக்கி இரண்டு குழந்தைகள் உயி ரிழந்த சம்பவம் வேதனை யளிப்பதாக, தி.மு.க. துணை பொதுச்செயலாளர் கனி மொழி தெரிவித்துள்ளார்.

தி.மு.க. துணை பொதுச் செயலாளர் கனிமொழி இரா ஜாத்தி கருணாநிதி எம்.பி. வெளியிட்டுள்ள சமூக வலை தளப் பதிவில், ராம நாதபுரம் மாவட்டம் கழுதி அருகே அச் சங்குளம் அரசு குடிநீர் சுத்திக ரிப்பு நிலை யத்தில் ஏற்பட்ட மின்கசிவில் சிக்கி 11 வய தான நிறைமதி மற்றும் 6 வயதான பால பிரவீன் இரு வரும் உயிரி ழந்த சம்பவம் மிகுந்த வேதனையளிக்கி றது.

தனது இரண்டு பிள்ளை களையும் இழந்து தவிக்கும் பெற்றோரின் வலியை வார்த் தைகளால் விவரிக்க இய லாது என்று கூறி யுள்ளார்.

மின்கசிவு குறித்து ஏற்கெ னவே புகார் அளிக்கப்பட்டும் நடவடிக்கை எடுக்காத அரசு அலுவலர் களின் அலட்சியம் குறித்து உரிய விசாரணை நடத்தி, தவறு செய்தவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுப்ப தோடு, அக்குடும்பத்திற்கு உரிய நீதி கிடைப்பதை அரசு உறுதி செய்ய வேண்டும் என்றும் குழந்தைகளின் குடும்பத்தினருக்கு தனது ஆழ்ந்த இரங்கலை கனி மொழி இராஜாத்தி கருணா நிதி எம்.பி. தெரிவித்துள்ளார்.

மதுரை மாநகராட்சி தெருவுக்கு சாலமன் பாப்பையா பெயர்!

தி.மு.க. குரலுக்கு செவிசாய்த்த மாநகராட்சி!

மதுரை, அக். 5 - மதுரை மாநகராட்சி யில் உள்ள தெருவுக்கு சால மன் பாப்பையா பெயர் வைப்பதற்கு தி.மு.க. வினர் கொண்டுவந்த தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப் பட்டது.

மதுரை அரசரடி ஞான ஒளிவுபுரத்தைச் சேர்ந்த மில் தொழிலாளி சுந்தரத்தின் மகனாக 1936 ம் ஆண்டு பிப். 22ம் தேதி பிறந்தவர் சாலமன் பாப் பையா. இவர், உடல்நலக் குறைவால் தனது 90வது வயதில் கடந்த செப்.11ம் தேதி காலமானார்.

இவரின் உடல் அரசு மரியாதையுடன் தகனம் செய்யப்பட்டது.

இவர், பேராசிரியராக. மேடை பேச்சுகள், பட்டி மன்றங்கள் மூலமாக தமிழ் மொழிக்கும்.

இலக்கியத்துக்கும், சமூ கத்துக்கும் ஆற்றிய சேவை அளப்பரியது.

அவரது நினைவை போற்றும் வகையில், அவர் வாழ்ந்த தெருவுக்கு, அவ ரது பெயரை வைக்க வேண்டும் என ஏற்கெ னவே மாநகராட்சி கூட் டத்தில் தி.மு.க. மாமன்ற குழுத் தலைவர் ஜெயராம் தெரிவித்தார்.

இந்நிலையில், நடை பெற்ற கூட்டத்தி லும் மீண்டும் அவர் அந்த தீர்மா னத்தை முன்மொழி ந்தார். இதையடுத்து இந்த தீர்மா னம் எதிர்ப்பின்றி ஒருமன தாக நிறை வேற்றப்பட் டது.

இதனைத் தொடர்ந்து, அவர் வசித்த தெருவுக்கு சாலமன் பாப்பையா பெயர் வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட உள்ளன.

வணிகர்கள் என்றென்றும் தி.மு.க. பக்கம் என்பதை நிருபிக்க

மதுராந்தகம் - தாராபுரம் தொகுதிகளில் தி.மு.க. வேட்பாளர்களை வெற்றியடையச் செய்வோம்!

தமிழ்நாடு சிறு குறு தொழில் முனைவோர் சங்கங்களின் கூட்டமைப்புத் தலைவர் பி.டி.பாண்டிச் செல்வம் அறிக்கை!

சென்னை, அக். 5 - தமிழ்நாடு சிறு குறு தொழில் முனைவோர் சங் கங்களின் கூட்டமைப்பு தலைவரும் கழக வர்த்தகர் அணி மாநில இணைச் செயலாளருமான பி.டி. பாண்டிச்செல்வம் விடுத் துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டின் முன் னாள் முதலமைச்சர் முத்த மிழ் அறிஞர் கலைஞர் அவர்களுடைய பொற் கால ஆட்சியிலும் அதைத் தொடர்ந்து முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியி லும் இந்திய ஒன்றியத்தில் தமிழ்நாடு வணிகத் துறை யிலும் தொழில் துறை யிலும் சிறந்து விளங்கியது என்ற வரலாற்று உண்மை நாம் அனைவரும் அறிந் ததே.

குறிப்பாக வரலாற்றில் முதல் முறையாக வணிகப் பெருமக்களின் நீண்ட கால கோரிக்கையான வணிக நலம் வாரியத்தை 1989 கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த போது வணிக நல வாரி யத்தை அமைந்து நம்மு டைய நீண்டகால கோரிக் கையை நிறைவேற்றி சிறப்பு செய்தார்கள். அதைத்தொ டர்ந்து வரிவகைகளை எளி மைப்படுத்தி அதன் மூலம் வணிகர்கள் மற்றும் சிறு குறு நடுத்தர தொழில் முனைவோரை பாதுகாக் கும் பணியையும் செய்து தந்தார்கள். மேலும் சிறு குறு மற்றும் நடுத்தர தொழில்களை ஊக்கி வைக் கும் வகையில் தமிழ்நாடு முழுவதும் சிப்காட் மற்றும் சிட்கோ தொழில்பேட்டை களை உருவாக்கி தொழில் கட்டமைப்பை விரிவு படுத்தி அதன் மூலம் தொழி லும் வர்த்தகமும் வேலை வாய்ப்பு அனைத்து தரப்பு மக்களுக்கும் பயனாக கிடைத்தது என்பதும் அனைவரும் அறிந்த ஒன்று.

அதைத் தொடர்ந்து முத் துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தலை மையிலான திராவிட மாடல் ஆட்சியில் வணிக நல வாரியம் பல்வேறு சலு கைகளை தந்து புது மெரு கேற்ற பட்டு வணிகப் பெருமக்களுக்கு பெருமள வில் அது பயன்பட்டது. மேலும் சிறந்த தொழில் முனைவோர் திட்டங்க ளான நீட்ஸ் என்று அழைக் கப்படும் அண்ணல் அம் பேத்கர் வணிக மேம்பாட்டு திட்டமும், மானி யத்துடன் கூடிய மூலதனத்தோடு கலைஞர் கைவினை திட்ட மும் நிறைவேற்றப்பட்டது அனைவரும் அறிவோம். தொழில் வளர்ச்சி பெரு கிட புதிதாக தொழில் தொடங்கிட ஒற்றைச் சாளர முறையை நடைமு றைப்படுத்தி எளிமையாக்கி யது போன்ற பல்வேறு எண் ணற்ற நம்முடைய பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற் றிய தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு நாம் அனைவ ரும் நன்றி செலுத்தும் வகை யிலும் வர இருக்கின்ற மது ராந்தகம் மற்றும் தாராபுரம் சட்டமன்ற இடைத்தேர்த லில் முற்போக்கு கூட்டணி திமுக வேட்பாளர்களை ஆதரிக்க வேணுமாய் வணி கம் மற்றும் வர்த்தகம் சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோர்கள் அனைவரையும் பணிவன்பு டன் வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு பி.டி.பாண் டிச் செல்வம் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



மதுராந்தகம் சட்டமன்றத் இடைத்தேர்தலில் மதுரவாயல் வடக்கு பகுதிக்கு ஒதுக்கப்பட்ட மெய்யூர் ஊராட்சி பகுதியில் 91, 92 வது வட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட சரஸ்வதி நகரில் வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் ஜ. பரந்தாமனுக்கு மதுரவாயல் வடக்கு பகுதி செயலாளர் நொளம்பூர் வே.ராஜன் முன்னிலையில் வட்ட கழக செயலாளர்கள், எம்.எம். ஜெயரத்தினம், எம்.கே.பி.அண்ணாதாசன், பகுதி துணை செயலாளர் ஆ.மாலினி, மாவட்ட பிரதிநிதிகள் எம்.சி.எழில்அரசு, ஆர்.ரசூல்தீன் ஆகியோர் வாக்கு சேகரித்தனர். இந்நிகழ்வில் எம்.எஸ். சந்தானம், எம்.பி.நவராஜ்,, பி.தயாநிதிபிரபு ,ஏ.மதி, ஆர்.அமுதா எம்.கே.பி.ஜெயசீலன், எம்.டி.ராஜி,கே.தயா எம். எஸ்.கார்த்திக், ஜே.ரூபன்ஜசக், சி.தீபா எம்.சி.எம்.வினோத், பி.முத்து, கே.சுரேஷ்குமார், முனிஷ் மற்றும் மெய்யூர் ஊராட்சி சரஸ்வதி நகர் நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



தாராபுரம் சட்டமன்ற இடைத்தேர்தலில் கழக வெற்றி வேட்பாளர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு செயலாளர் டாக்டர்.அ.சுபேர்கான் தாராபுரம் ஆர்.சி. சர்ச் பங்குத்தந்தை ஜார்ஜ் தனசேகரன் அவர்களை கழக நிர்வாகிகளுடன் சந்தித்து ஆதரவு கோரினார்.



சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு ஆலோசனைக்கிணங்க சென்னை மேற்கு மாவட்ட சிறுபான்மை நல உரிமைப் பிரிவு அமைப்பாளர் எஸ்.எச்.ரஹ்மத்துல்லா தலைமையில் அச்சரப்பாக்கம் வடக்கு ஒன்றியம் வெள்ளப் புத்தூர் ஊராட்சி பாகம் 43இல் அமைந்துள்ள ஜாமியா பள்ளிவாசலில் வெள்ளிக்கிழமை ஜும்மா தொழுகைக்குப் பிறகு வெற்றி வேட்பாளர் ஐ.பரந்தாமனை ஆதரித்து பிரச்சாரம் மேற்கொண்டனர். உடன் சென்னை மேற்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் விஜய், வட்டச் செயலாளர் ஜெகதீசன் கிளைச் செயலாளர் ஜான் பாஷா மற்றும் முக்தார், ரங்கா கொவ்ஸ், பள்ளி நிர்வாக தலைவர் ஜான் அகமது, பீர் முகமது உடன் இருந்தனர்.



மதுராந்தகம் சட்டமன்றத் இடைத்தேர்தலில் மதுரவாயல் வடக்கு பகுதிக்கு ஒதுக்கப்பட்ட மெய்யூர் ஊராட்சி பகுதியில் 91, 92 வது வட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட சரஸ்வதி நகரில் வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் ஜ. பரந்தாமனுக்கு மதுரவாயல் வடக்கு பகுதி செயலாளர் நொளம்பூர் வே.ராஜன் முன்னிலையில் வட்ட கழக செயலாளர்கள், எம்.எம். ஜெயரத்தினம், எம்.கே.பி.அண்ணாதாசன், பகுதி துணை செயலாளர் ஆ.மாலினி, மாவட்ட பிரதிநிதிகள் எம்.சி.எழில்அரசு, ஆர்.ரசூல்தீன் ஆகியோர் வாக்கு சேகரித்தனர். இந்நிகழ்வில் எம்.எஸ். சந்தானம், எம்.பி.நவராஜ்,, பி.தயாநிதிபிரபு ,ஏ.மதி, ஆர்.அமுதா எம்.கே.பி.ஜெயசீலன், எம்.டி.ராஜி,கே.தயா எம். எஸ்.கார்த்திக், ஜே.ரூபன்ஜசக், சி.தீபா எம்.சி.எம்.வினோத், பி.முத்து, கே.சுரேஷ்குமார், முனிஷ் மற்றும் மெய்யூர் ஊராட்சி சரஸ்வதி நகர் நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



மதுராந்தகம் தனி சட்டமன்றத்திற்கான இடைத்தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் வெற்றி வேட்பாளர் ஏ.பரந்தாமனுக்கு உதயசூரியன் சின்னத்தில் அருங்குணம் ஊராட்சி, 239 பாகத்தில் உள்ள வாக்காளர்களை சந்தித்து காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், மாவட்ட மாணவர் அமைப்பாளர் பிரபு, மாநகர அமைப்பாளர் சத்திய பிரபு, மாவட்ட துணை அமைப்பாளர் தினேஷ் ,நகர அமைப்பாளர் மகேஷ் மற்றும் நிர்வாகிகள் வாக்குகளை சேகரித்தனர்.



மதுராந்தகம் (தனி) இடைத்தேர்தலை முன்னிட்டு கழக வேட்பாளர் இ பரந்தாமனுக்கு அருங்குணம் ஊராட்சியில் உள்ள பாகம் 238ல் அடங்கிய புளியரணங்கோட்டை ரோடு, மேட்டு தெரு, பிராமணர் தெரு, ஏரிக்கரை தெரு, தெற்கு தெரு, ஆகிய தெருக்களில் 04.10.2026 நேற்று ஆலந்தூர் தெற்கு பகுதி, வடக்கு பகுதி கழக செயலாளர்கள் என். சந்திரன் எம் சி, பா. குணாளன், ஆகியோர் தலைமையில் வீடு வீடாக சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தனர். இப்பிரச்சாரத்தில் தலைமை பொதுக்குழு உறுப்பினர் ஆர். டி. பூபாலன், வ.ப. து. செயலாளர் கோடீஸ்வரன், மா.அ. சா ஓ. அ. அமைப்பாளர் நிர்வாகி நெய்வேலி தங்கம், வட்ட செயலாளர்கள் ஜெ. நடராஜன், ஏ. ஆர். சரவணா, கே. பி. முரளிகிருஷ்ணன், ஜெ. செல்வேந்திரன், மாமன்ற உறுப்பினர் ஏ. சாலமோன், கிளை செயலாளர்கள் மகாலிங்கம், மாரியப்பன், சுரேஷ், தேவராஜ், நிர்வாகிகள் பிரான்சிஸ், குணா, ரங்கன், மகேந்திரன்,சேட்டு குமார், பிரகாஷ், அப்துல், மற்றும் கழக நிர்வாகிகள் அனைவரும் உடன் இருந்தனர்.



மதுராந்தகம் தனி சட்டமன்றத்திற்கான இடைத்தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் வெற்றி வேட்பாளர் ஏ.பரந்தாமனுக்கு உதயசூரியன் சின்னத்தில் அருங்குணம் ஊராட்சி, 239 பாகத்தில் உள்ள வாக்காளர்களை சந்தித்து காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், மாவட்ட மாணவர் அமைப்பாளர் பிரபு, மாநகர அமைப்பாளர் சத்திய பிரபு, மாவட்ட துணை அமைப்பாளர் தினேஷ் ,நகர அமைப்பாளர் மகேஷ் மற்றும் நிர்வாகிகள் வாக்குகளை சேகரித்தனர்.


மதுராந்தகம் (தனி) இடைத்தேர்தலை முன்னிட்டு கழக வேட்பாளர் இ பரந்தாமனுக்கு அருங்குணம் ஊராட்சியில் உள்ள பாகம் 238ல் அடங்கிய புளியரணங்கோட்டை ரோடு, மேட்டு தெரு, பிராமணர் தெரு, ஏரிக்கரை தெரு, தெற்கு தெரு, ஆகிய தெருக்களில் 04.10.2026 நேற்று ஆலந்தூர் தெற்கு பகுதி, வடக்கு பகுதி கழக செயலாளர்கள் என். சந்திரன் எம் சி, பா. குணாளன், ஆகியோர் தலைமையில் வீடு வீடாக சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தனர். இப்பிரச்சாரத்தில் தலைமை பொதுக்குழு உறுப்பினர் ஆர். டி. பூபாலன், வ.ப. து. செயலாளர் கோடீஸ்வரன், மா.அ. சா ஓ. அ. அமைப்பாளர் நிர்வாகி நெய்வேலி தங்கம், வட்ட செயலாளர்கள் ஜெ. நடராஜன், ஏ. ஆர். சரவணா, கே. பி. முரளிகிருஷ்ணன், ஜெ. செல்வேந்திரன், மாமன்ற உறுப்பினர் ஏ. சாலமோன், கிளை செயலாளர்கள் மகாலிங்கம், மாரியப்பன், சுரேஷ், தேவராஜ், நிர்வாகிகள் பிரான்சிஸ், குணா, ரங்கன், மகேந்திரன்,சேட்டு குமார், பிரகாஷ், அப்துல், மற்றும் கழக நிர்வாகிகள் அனைவரும் உடன் இருந்தனர்.

மதுராந்தகம் இடைத்தேர்தலில் கழக வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமனுக்கு ஆதரவாக உதயநிதி ஸ்டாலின் நற்பணி மன்றத்தின் மாநில துணை செயலாளர் ஜி.எம்.கலீம் தலைமையில் மாவட்ட நிர்வாகிகள் வி.ஜே.உமாமகேஸ்வரன், எஸ். யுவராஜ், ரா.கிரண்குமார், ஒற்றியூர் ஆ.பாலு, ஞானம், மற்றும் முரளி, தி.நிர்மல், ஏ. தினேஷ் நிர்வாகிகளுடன் உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்தனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

பி. திருஞானசம்பந்தம்

அக்டோபர் 5 (1983)



காளையார்கோவில் ஒன்றியக் கழகச் செயலாளராக பணியாற்றியவர்.

பாகனேரி ஊராட்சி மன்றத் தலைவராகவும், 1968 முதல் 1974 வரை தமிழக சட்டமன்ற மேலவையில் கழக உறுப்பினராக பணியாற்றியவர்.

1966ஆம் ஆண்டு சிவகங்கையில் நடைபெற்ற ஒன்றுபட்ட இராமநாதபுரம் – மதுரை மாவட்டங்களின் கழக மாநாட்டில் தொண்டர்படைத் தலைவராக பணியாற்றியவர்.

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்று 1963 முதல் 1965 வரை சிறையிலிருந்தவர். விலைவாசி உயர்வுப் போராட்டத்தில் பங்கேற்று சிறை சென்றவர்.

'கழகம் வளர்த்த கருப்பு தங்கம்' என அப்பகுதி கழகத் தோழர்களால் அன்போடு அழைக்கப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

தாராபுரத்தில் வேட்பாளர் சுகன்யாவை ஆதரித்து

ஜி.வி.மார்க்கண்டேயன் எம்.எல்.ஏ. வாக்குச் சேகரிப்பு!

திருப்பூர். அக். 5 - தாராபுரம் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வெற்றி வேட்பாளர் திருமதி. சுகன்யா அவர்களை ஆதரித்து கொளத்துப்பாளையம் பேரூர் காந்திஜி நகரில் வாக்காள பெருமக்களிடம் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், தலை மைச் செயற்குழு உறுப்பினர் திரு மிகு. G.V.மார்க் கண்டேயன் அவர்கள், வெற்றி சின்னமாம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்கள்.உடன் விளாத்தி குளம் தெற்கு ஒன்றிய செயலாளர் இம்மானுவேல் தாரா புரம் கிழக்கு ஒன்றிய செயலாளர் துரைச்சாமி பொதுக்குழு உறுப்பி னர் ராஜாக்கண்ணு வடக்கு மாவட்ட ஆதிதிராவிடர் அணி அமைப்பாளர் முத்துராஜ் வடக்கு மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் பாண்டியராஜன் எப்போதும்வென்றான் சோலை சாமி திருக்கோவில் அறங்காவலர் குழு தலைவர் முத்துக்குமார் பேரூ ராட்சி கவுன்சிலர் சுந்தரலிங்கம் வேட நத்தம் முன்னாள் கூட்டு றவு சங்கத் தலைவர் சண்முக ஆனந்த் கிளைச் செயலாளர் வேலுச்சாமி கிளைச் செயலாளர் கணேசன் விளாத்திகுளம் பேரூர் கழக வார்டு செயலாளர்கள் தமிழரசன்,மாரி ராஜ் பேரூர் கழக இளைஞர் அணி துணை அமைப்பாளர் ராமகிருஷ் ணன் பொறியாளர் அணி ரங்க ராஜ் கழக நிர்வாகி மாரிச்செல்வம் மகளிர் அணி சுமதி விளாத்தி குளம் சட்டமன்றத் தொகுதி சமூக வலைதள அணி ஒருங்கிணைப் பாளர் கரண்குமார் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.